விலை: 30.00
பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 234 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 25 புதன்கிழமை (10.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## அரச அடக்குமுறையை நிறுத்துங்கள்
## பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

அரச அடக்குமுறையை நிறுத்துமாறும் அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறும் கோரி ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக் 11

## ஒடுக்குமுறையை கைவிடுங்கள்
### ரணிலிடம் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(நியூயோர்க்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒடுக்குமுறையை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகம் உறுதி செய்யவேண்டும் எனவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப் 11

போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை
## வேட்டையாட அரசு ஆரம்பித்துள்ளது
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

"இந்த நாட்டில் பொதுமக்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட 11

## 75%
### மின் கட்டணம் அதிகரிப்பு
5ஆம் பக்கம் பார்க்க

## மல்லாகத்தில் வாள்வெட்டு
### ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)


மல்லாகத்தில் இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். 11

இலங்கையை நோக்கி
## வேகமாக பயணிக்கும் சீனாவின் ஆய்வுக் கப்பல்
### நாளை அம்பாந்தோட்டை வந்தடையலாம்
### கடும் நெருக்கடியில் ரணில் அரசாங்கம்

(கொழும்பு)

சீனாவின் அதிநவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட ஆய்வுக்கப்பல் இலங்கையை நோக்கி அதிவேகமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. நாளை வியாழக்கிழமை அம்பாந்தோட்டை துறைமுகத்தை குறித்த கப்பல் வந்தடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(11ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.போதனாவில்
## 6 தொற்றாளர்கள் அடையாளம்


(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான ஆறு நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாக யாழ். போதனா வைத்திய 11

## பாராளுமன்றம் முடங்கியிருந்தால் நாடு ஆட்சியை இழந்திருக்கும்
### வன்முறையாளர்களை ஒடுக்கியதற்காக இராணுவத்துக்கு ஜனாதிபதி புகழுரை

(கொழும்பு)

"வன்முறையாளர்கள்பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்து சபையை முடக்கியிருந்தால் நாடு ஆட்சியை இழந்திருக்கும். அவ்வாறு நடந்திருந்தால் நாட்டின் நிலைமை முற்றிலும் வேறாக இருந் 12



## ரணிலைச் சந்திக்க ஜே.வி.பி மறுப்பு
### எழுத்துமூலம் முன்மொழிவுகளை சமர்ப்பிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

சர்வகட்சி அரசாங்கம்தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தாம் பங்கு 11

யாழ்.ஆனைக்கோட்டைப் பகுதியில்
## விபரீத முடிவெடுத்த மாணவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவி ஒருவர் விபரீத முடிவெடுத்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 02

கொரோனா
## வவுனியாவில் ஒருவர் மரணம்

(வவுனியா)

வவுனியாவில் மீண்டும் கோவிட் தொற்றுக் காரணமாக ஒருவர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் 11

## காரைநகர் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின்
### இரண்டு வீடுகள் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழக்கு பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் இரண்டு வீடுகள் கும்பல் ஒன்றினால் நேற்றிரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிட் தொற்று மேலும் 6 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 6 பேர் கோவிட்-19 தொற்றால் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

4 ஆண்களினதும், 2 பெண்களினதும் மரணங்கள் இவ்வாறு பதிவாகியுள்ளன.

30 முதல் 59 வயதுக்குட்பட்ட ஒருவரும், 60 வயதிற்கு மேற்பட்ட ஐவரும் கோவிட் தொற்றால் மரணித்தனர்.

இதன்படி, நாட்டில் இதுவரையில் பதிவான கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 594 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

# நல்லூர் ஆலய சூழலில் போலி நாணயத் தாள்களுக்கு பொருட்கள் வாங்கியவர் கைது

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய சூழலில் உள்ள கடைகளில் போலி ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களினை வழங்கி பொருட்கள் வாங்கிய ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 2 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களும் 3 கடைகளில் வழங்கிய 3 ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா இடம்பெற்று வருகிறது.

ஆலய திருவிழாவின் முதல் மூன்று நாள்களில் மூன்று வெவ்வேறு கடைகளுக்குச் சென்ற ஒருவர், போலி ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களை வழங்கி கச்சான், பழங்களை 200 ரூபாய்க்குள் வாங்கி மிகுதி பணத்தை பெற்றுச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

அவை தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நல்லூரடியைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் விசாரணைகளின்பின் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு போலி நாணயத்தாள்களை அச்சிட்டு வழங்கியவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் கூறினர். (ம-7)

# தெரிவுக்குழுவுக்கு பாராளுமன்றம் அனுமதி

(கொழும்பு)

9ஆவது பாராளுமன்றத்தின் 3ஆவது கூட்டத்தொடரின் தெரிவுக்குழுவுக்கு நேற்று பாராளுமன்ற அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

சபாநாயகர் மகிந்த அபேவர்தன தலைமையிலான குறித்த தெரிவுக்குழுவில் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க, நிமல் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களான லக்ஸ்மன் கிரியல்ல, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கயந்த கருணாத்திலக்க, ரவூப் ஹக்கிம், காமினி லொக்குகே, விஜித ஹேரத், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட இந்த தெரிவுக்குழுவானது பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முதன்முறையாக கூடியிருந்தது.

இந்த குழுவின் ஊடாக கோப் மற்றும் கோபா ஆகிய பாராளுமன்ற தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன. (ம-7)

# அரச செலவீனங்கள் தொடர்பில் திருத்தப்பட்ட சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அரசாங்க செலவீனங்கள் தொடர்பில் திருத்தப்பட்ட முன் கூட்டிய ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் படி, பாதுகாப்பு, கல்வி மற்றும் சுகாதாரம்ஆகிய துறைகளின்செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. 2022 வரவு செலவுத் திட்டத்தில் செலவீனங்களுக்கான 2.78 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்ட நிலையில், தற்போது 3 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புக்காக 375 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே அந்த துறைக்கு 373 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

சுகாதாரத்துக்காக 348 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே அதற்கு 153.5 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

கல்விக்காக ஏற்கனவே 127 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 200 பில்லியன் ரூபாய்களாக உயர்த்தப்பட்டுள்ளன.

ஒதுக்கீட்டுக் கணக்கின்படி பொது நிர்வாகத்திற்கான தொடர்ச்சியான செலவினங்களுக்காக 682,728,000,000 ரூபா என்ற பாரிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சுக்காக 212,808,260,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-7)


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 30 - 07 - 1940

விண்ணில் 21 - 07 - 2021

மட்டக்களப்பு ஊரணியைப் பிறப்பிடமாகவும்
கதிரிப்பாய், அச்சுவேலி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

நடுவில்தம்பி சிவசம்பு

(இளைப்பாறிய கடற்படை வீரர்)

கடந்த 21.07.2021 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு தின திதி இன்று (10.08.2022) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். எங்களின் குடும்ப ஆலவிருட்சம் எமை ஆறாத் துயரில் விட்டுச் சென்றபோது எங்களின் துயரில் நேரில் வந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எம்மோடு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரிகையில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி நவில்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(12361)

தகவல்: குடும்பத்தினர்
021 226 0303


# யாழிலிருந்து கதிர்காமத்திற்கு விசேட பேருந்து சேவை

(கொழும்பு)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பாகி இடம்பெறும் நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபையினரால் யாழில் இருந்து கதிர்காமக் கந்தன் ஆலயத்திற்கான விசேட பேருந்து சேவை நாளை மறுதினம் 12ஆம் திகதி வரை இடம்பெற உள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை முகாமையாளர் குணசீலன் தெரிவித்தார்.

எதிர்வரும் 12ஆம் திகதி வரை ஒவ்வொருநாளும் மாலை 5.15 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து புறப்படும் எனவும், கதிர்காமம் செல்ல விரும்பும் பக்தர்கள் குறித்த பேருந்து சேவையினை பயன்படுத்துமாறும் அறிவித்துள்ளார். (ம-7,33,104)

## காரைநகர்...

றது.

அண்மைய நாட்களாக கும்பல் ஒன்று காரைநகர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்பத்தில் ஈடுபட்டிருக்கின்றது.

இதன் தொடராக,குறித்த நபர்களால் உரிமையாளருக்கு வாள் காட்டி மிரட்டல் விடப்பட்டிருக்கின்றது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸில் முறையிடப்பட்ட சம்பவத்தில் தொடர்புபட்ட நபர்களில் இருவரைக் கைது செய்திருந்தனர்.

அவர்களில் ஒருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

இதன் தொடராக நேற்று இரவு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் வீடுகள் மீது தீ வைக்கப்பட்டுள்ளது.

வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டபோதிலும் நீண்ட நேரமாக பொலிஸார் அங்கு வரவில்லை என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## விபரீத முடிவெடு...

உதயசங்கர் நிவேதிகா வயது 22 என்ற மாணவியே உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் உடல் கூற்று சோதனை இடம்பெற்று நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை பாதுகாப்பதற்கு உதவுங்கள்

## கலாநிதி.ஆறு.திருமுருகன் அவசர வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவத்திருக்கோயிலாகிய திருக்கோணேஸ்வரர் திருத்தலத்தைப் பாதுகாப்பதற்கு உதவுங்கள் எனத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவரும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் இலங்கைப் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆலயத்திற்குச் செல்லும் வழியில் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவசர அவசரமாக வீதியின் இரு மருங்கிலும் இரத்தினபுரியைச் சேர்ந்தவர்கள் எந்த உத்தரவுமின்றி தற்காலிக கடைகள் அமைத்தனர். அக் கடைகள் தற்போது 58 ஆக அதிகரித்து விட்டன. இக் கடைகள் அமைப்பவர்களுக்கும் திருக்கோணேஸ்வரக் கோயிலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

திட்டமிட்டு ஆலயச் சூழலை ஆக்கிரமிப்பது போல் இக் கடைகள் அமைக்கப்பட்டன. இது தொடர்பாகத் திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகம் பல இடங்களிலும் புகார் செய்த போதிலும் எவ்வித பலனும் கிட்டவில்லை.

தற்போது திருக்கோணேஸ்வரம் செல்லும் பாதைக்கு அருகில் கோவில் சமதரையில் இவர்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கத் தொல்லியல் திணைக்களம் திட்டமிட்டு வருகின்றது.

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயச் சுற்றாடலில் வேற்று மதங்களுக்கான கட்டட நிர்மாணப் பணிகள் சுதந்திரமாக நடைபெற்று வருகின்றன.

திருக்கோணேஸ்வரர் ஆலயத் திருப்பணியை மட்டும் தொல்லியல் திணைக்களம் தலையீடு செய்து திருப்பணிகளைத் தடுத்து வருகிறார்கள். இந்துசமயத்தவர்களுக்கும் தமிழினத்திற்கும் செய்யும் மாபெரும் துரோகமாகும்.

திருக்கோணேஸ்வரம் இந்திய மக்களுடனும் தொடர்புடைய கோயில். இந்திய அரசாங்கமும் திருக்கோணேஸ்வரர் திருப்பணி தொடர்பாக விரைவில் செயற்படுவதற்கு பிரதமரும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன் அக்கறை செலுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (4-18)

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அற்றைத்திங்கள் நிகழ்வு

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச் சங்கத்தினால் தமிழின் மூத்த படைப்பாளிகளும் தகைசான்ற ஆளுமைகளும் தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு நாளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு உரை நிகழ்த்தவுள்ளார். (4)

## நிர்வாகத் தெரிவு

(பூநகரி)

பூநகரி பிரதேச மருத்துவமனையில் நோயளர் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு பூநகரி பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச்சங்கம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. மருத்துவ அதிகாரி Dr.ஸ்ரீ.ஆனந்தசிறி தலைமையில் கூட்டம் சென்றவாரம் நடைபெற்றது.

இதன்போது தலைவராக Dr.ஸ்ரீ. ஆனந்தசிறி தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக பே. கெனரீசன், செயலாளராக திருமதி. சிறி. பிருந்தா, உப செயலாளராக திருமதி. கு. புனிதலதா, பொருளாராக கு. புவியரசன் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 3 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (4-84)

## பணம் நகை திருட்டு

(கரணவாய்)

நாவலர்மடம் கீரீப்பள்ளி கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை இரவு இரண்டரை பவுண் சங்கிலியும் 50 ஆயிரம் ரூபாய் பணமும் களவு போயுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோயில் திருவிழாவிற்கு செல்லும் பொதுமக்கள் தங்களுடைய வீடுகளை அவதானமாகப் பூட்டி பாதுகாப்பாக கோயிலுக்குச் சென்று வருமாறும் நகைகள் அணிவதை தவிர்க்குமாறும் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார். (4-60)

## பொலிஸ் நிலையம் இடமாற்றம்

(பூநகரி)

கடந்த பல வருட காலமாக பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் உள்ள தனியார் வீடுகளில இயங்கி வந்த பூநகரி பொலிஸ் நிலையும் சென்ற மாத இறுதியில் இருந்து பூநகரி சங்குப்பிட்டி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கான கட்டடத் தொகுதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. (4-84)

## வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனையின் மருந்தகம் தீக்கிரையானது

(முறிகண்டி)

கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனையின் மருந்தகம் தீக்கிரையாகியுள்ளது.



குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. மருந்தகத்தில் ஏற்பட்ட மின்னொழுக்கு, குறித்த தீ விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, மருந்தகத்தில் வைக்கப்பட்டிருந்த மருந்துகள் உட்பட பொருட்கள், தளபாடங்களிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில், தருமபுரம் பொலிஸாரும் தடயவியல் பிரிவினரும் பிராந்திய சுகாதார சேவையினரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-100-316-315)

## செல்லத்துரை அறக்கட்டளை நிதியம் நடத்தும் கலைப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அமரர். சைவப்புலவர் சு. செல்லத்துரையின் நினைவு தினத்தை முன்னிட்டு சைவப் புலவர் சு. செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தினால் கலைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டிகளும் அகில இலங்கை ரீதியான கலைப்போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகள் தனிப்போட்டி, குழுப்போட்டி என இரு பிரிவாக வகைப்படுத்தப்பட்டு நடைபெறும். தனிப்போட்டியில் பஞ்சபுராணம் ஓதல், அபிநய நடனம், பேச்சு, விநாடிவினா, கதாபிரசங்கம் என்பனவும் குழுப்போட்டியில் புராணபடனம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், நாடகம் என்பனவும் நடத்தப்படவுள்ளன.

போட்டி தொடர்பான விதிமுறைகள், விண்ணப்பப் படிவம் என்பன பாடசாலைகளுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மட்டப் போட்டிகளில் பங்கு கொள்பவர்கள் தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

அகில இலங்கை ரீதியில் நாடகம், வில்லிசை ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்பிரிவில் குழு நிலையில் எந்த அமைப்பினரும் இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் பங்குபற்றலாம். வயதெல்லை இல்லை.

போட்டிக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் 2022.08.20 ஆம் திகதி ஆகும்.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 197 4332 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு அறிய முடியும் என சைவப் புலவர் சு. செல்லத்துரை அறக்கட்டளை நிதியம் அறிவித்துள்ளது. (4)

## நல்லைக்குமரன் மலர் வெளியீடும் 'யாழ். விருது' வழங்கும் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் சைவசமய விவகார குழுவினரால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 12 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் சைவசமய விவகாரக்குழு தலைவர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் முதல் பிரதியை பெறவுள்ளனர்.

அத்துடன் இவ்விழாவில் சைவத்திற்கும் தமிழுக்கும் சமூகத்திற்கும் தொண்டாற்றியவர்களை கௌரவித்து யாழ். விருது வழங்கும் நிகழ்வு வழமைக்கேற்ப இவ் வருடம் ஈழத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க, சிவத்தலமான திருக்கேதீச்சர ஆலய கும்பாபிஷேகப் பணிகளை ஆற்றி ஈழத்தில் சைவ சமய மறுமலர்ச்சிக்கு துணை செய்து இறைபணி புரிந்த திருக்கேதீச்சர ஆலய திருப் பணிச்சபையினருக்கு யாழ். விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர். அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022

# 27 ஆவது தகுதிகாண் போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி வெற்றி



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரில் 27 ஆவது தகுதிகாண் போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி T.YMHA அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று பிரிவு 'F' இல் 1 ஆம் இடத்தை (WINNERS) பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய T.YMHA அணி 45 ஓவர்களில் 164 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அஜந்தன்-59, யதுஸன்-27, கரோசதுண்-24 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் ஓல்ட்கோல்ஸ் அணி சார்பாக கஜேந்திரன் 6 ஓவர்களில் 26 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் நிரோஸன் 10 ஓவர்களில் 26 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் திலிபன் 10 ஓவர்களில் 28 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

165 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய ஓல்ட்கோல்ஸ் அணி 25.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களை பெற்றுள்ளது. நிரோஸன் ஆட்டமிழக்காது 66, கேதாவ்ஸன்- 36, மதுஸன்-33 ஓட்டங்களை பெற்றுள்ளனர்.பந்துவீச்சில் T.YMHA அணியைச் சார்ந்த அஜன்தன் 8 ஓவர்களில் 36 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளை கைப்பற்றினார்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2022 ஆம் ஆண்டுக்குரிய தரவரிசைப் பட்டியலுக்கு (RATING) ஓல்ட்கோல்ஸ் அணி 8.29 புள்ளிகளையும் T.YMHA அணி 2.04 புள்ளிகளையும்பெற்றுள்ளன. (4)

# டிறைற்றேன் அணியை வீழ்த்தியது றெயின்போ

இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரில் றெயின்போ அணி, டிறைற்றேன் அணியை 77 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றெயின்போ அணி 37.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. நிதர்ஸன்- 40, நிலக்சியன்-31, சிம்ஸன்- 25 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் டிறைற்றேன் அணியைச் சார்ந்த பிரியந்தன் 9 ஓவர்களில் 24 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் உதயசாந் 8.5 ஓவர்களில் 25 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிறைற்றேன் அணி 20.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றனர். மணிவண்ணன்-42 ஓட்டங்களை பெற்றுள்ளார். பந்துவீச்சில் றெயின்போ அணியைச் சார்ந்த யதுஸன் 8 ஓவர்களில் 15 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் திவாகன் 4.3 ஓவர்களில் 7 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கதிரவன் 7 ஓவர்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சதுஸ் 10 ஓவர்களில் 37 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 13 ஆண்டுகளாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்த (RATING) றெயின்போ அணி 8.36 புள்ளிகளையும் டிறைற்றேன் அணி 1.82 புள்ளிகளையும் பெற்றுள்ளன. (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2682

### கௌசிகன்

mom: ஆராரோ ஆரிரரோ
என் செல்ல குட்டி கண்ணுறங்கு,
ஆராரோ ஆராரோ ஆரிரரோ...



bay: பேசாம தூங்க விடுரியா இல்ல
எந்திரிச்சு போகவோ

### சாமினி




### ஆயிசன்

ஏன்டா எப்ப பார்த்தாலும் என்னை
குறைமாசத்தில
பொறந்தவனேன்னு கூப்பிடுறாய்?



பெப்பிரவரில பிறந்தவன
வேற எப்படி கூப்புறது

### சஸ்வின்

இவனை நம்பி எந்த சொந்தக்காரங்க
கல்யாணத்துக்கும் கூட்டிற்று போக முடியல



எந்த பொண்ணை பார்த்தாலும் அந்த பொண்ணு
எனக்கு என்ன முறைன்னு கேட்டு உயிரை வாங்குறான்...

### யதுதிகா

200 ரூபாய் பெற்றோல்
என்று அறிவித்து பாருங்க...



4 கப்பல் பெற்றோல் நாட்டுக்குள்ள
இருந்தே வெளிவரும்!

### ஆரணன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வருட இறுதிக்குள் நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுமக்கள் பாராளுமன்றத்தை முற்றுகையிடாத வகையில் பாதுகாப்பினை வழங்கி, இராணுவம் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றியுள்ளதாக ஜனாதிபதி ரணில். விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பெலவத்தை அகுரேகொடவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்திற்கு நேற்று செவ்வாய்க்கிழமை கண்காணிப்பு விடயம் மேற்கொண்டிருந்த போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.மேலும் பாராளுமன்ற நடவடிக்கைகளை முன் கொண்டு செல்வதுடன், மக்களின் நம்பிக்கையினை வென்றெடுக்கும் வேலைத்திட்டத்தினை பாராளுமன்ற உறுப்பினர்களே முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீள கட்டியெழுப்புவதுடன், அடுத்த வருட இறுதிக்குள் நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.(நி)

# 75 சதவீதத்தால் மின்கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் மின்கட்டணத்தினை அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.**

இது தொடர்பில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு வின் தலைவர் ஜனகரத்ன நாயக்க ஊடங்களுக்கு கருத்துத், தெரிவிக்கையில்,

இன்று முதல் 75 சத வீதத்தினால் மின்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் 30 அலகுகள் வரை பயன்ப டுத்தும் மின்சார பர்வனை யாளர்களின் மின்கட்டணத்தில் 198 ரூபாய் அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 60 அலகுகள் வரை பயன்படுத்தும் மின்சார பாவனையாளர்களின் மின் கட்டணத்தில் 200 ரூபா அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 90 அலகுகளுக்கு மேல் பயன்படுத்து பவர்களுக்கு 276 ரூபாய் அதிகரிப்பை மின்சார சபை கோரியிருந்த போதிலும், 125 ரூபாவான சிறிய தொகைக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# சுற்றுலாத் துறைக்கு புதிய எரிபொருள் அட்டை

(கொழும்பு)

சுற்றுலாத் துறைக்குத் தேவையான எரிபொருளை வழங்க புதிய எரிபொருள் அட்டையொன்று அடுத்த வாரம் அறிமுகப்படுத்தப்படும் என எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. (நி)

# 10 உள்ளூராட்சி மன்றங்கள் தரமுயர்த்தல்

(கொழும்பு)

செயற்பாட்டில் இருக்கும் 7 நகரசபைகளை மாநகரசபைகளாக மாற்றவும் 3 பிரதேச சபைகளை நகரசபைகளாக மாற்றுவது தொடர்பாக அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துலகுணவர்த்தன தெரிவித்தார்.

இந்நிலையில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

களுத்துறை, வவுனியா, புத்தளம், மன்னார், கேகாலை, அம்பாறை, திருகோணமலை ஆகிய நகரசபைகளை மாநகர சபைகளாகவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மொனராகலை ஆகிய பிரதேசசபைகளை நகர சபைகளாக தரமுயர்த்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களின் 10 பிரதான நகரங்களில் மாநகரசபை அல்லது நகர சபையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

# ஜனாதிபதித் தெரிவின் போது உறுப்பினர்கள் சிலர் அச்சுறுத்தப்பட்டனர்

## பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேய ஸ்ரீ

(கொழும்பு)

பாராளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது, சில-உறுப்பினர்கள் அச்சுறுத்தபட்டுள்ளார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேய ஸ்ரீ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர், பாராளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது, சில உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்த அச்சுறுத்தலினால் தான் அவர்கள், ஜனாதிபதி தெரிவின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள்.

இதுதொடர்பாக சபாநாயகர் விசாரணை நடத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# பெரும்போகத்திற்கு தேவையான எரிபொருளை வ்ழங்க துரித நடவடிக்கை

(கொழும்பு)

பெரும்போகத்திற்கு தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், பொலநறுவை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி அறுவடை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையரன அளவு டீசல் வழங்கப்பட்டு வருவதாகவும் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் டீசல் விநியோகம் செய்யப்படும் என்றும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

10.08.2022
ஆடி 25, புதன்கிழமை
திரயோதசி பிற்பகல் 12.44 மணிவரை

பூராடம் முற்பகல் 8.42 மணிவரை
சுப நேரம் -4.34-6.04 மணிவரை
இராகு காலம் -12.04-1.34 மணிவரை

சந்திராஷ்டமம்- மிருகசீரிடம்

**வளவன்**


மேஷம்

கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


கடகம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு.


துலாம்

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.


மகரம்

பெரியோரின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் , போசன சுகமுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.


ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.


சிம்மம்

இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள்.


விருச்சிகம்

உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு,வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

சிறிய வேலை ஒன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


மிதுனம்

ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.


கன்னி

வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்ப[illegible]


தனுசு

நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சுபநிகழ்வுகளில் [illegible]ளும் வாய்ப்புண்டு.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் உணர்வு உன் அறிவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கட்டும்.




# சிறுவர் அரங்கம்

### அம்புலிமாமா

## மனம் மாறியது



(நேற்றைய தொடர்ச்சி)

வந்த மூன்று அழகிகளும் மூன்று பிசாசுகளே.மூவரில் ஒருத்தி சிரித்தவாறே "அட பைத்தியக்காரியாக இருக்கிறாயே! புற அழகா அழகு! ரொம்ப அழகானவன் என்று என் அக்கா நிறைய வரதட்சணை கொடுத்து கல்யாணம் செய்து கொண்டாள் ஒருவனை. ஆனால் அவன் ஒரு விபத்தில்..." என்றாள்.

அதற்கு மற்றொருத்தி "வேண்டாம் அந்த கோர சம்பவத்தை கூறாதே. என் சிநேகிதி பணக்காரன் என்றும் அழகன் என்றும் எண்ணி ஜமீன்தாரின் மகனை மணந்து கொண்டாள். அவனோ குடிகாரன். தினமும் குடித்துவிட்டு அவளை அடிக்கிறான். அப்புறம்..." என்று ஏதோ சொல்லப் போனாள். அதை மூன்றாவது அழகி இடைமறித்து "இப்போது அந்தக் குடிகாரன் பேச்சு எதற்கு? என் பெரியம்மாவின் பேத்தி மகா மன்மதன், அழகன் என்று வாட்டசாட்டமான ஒருவனோடு ஓடிப்போய் அவனைக் கல்யாணம் செய்து கொண்டாள். ஆனால் அவன்வீட்டிற்குப் போனதும் அவளை வேலைக்காரி போலத்தான் நடத்தினான்" என்றாள்.

அப்போது அபர்ணாவே "போதும் நீங்கள் சொல்ல வந்தது மாதவன் அழகனாக இல்லாது போனாலும் நற்குணங்கள் படைத்தவன் என்றுதானே. அவருக்கு ஏற்கனவே கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. நீங்கள் ஏமாந்து திரும்பிப் போக வேண்டியதுதான்" என்றாள்.

மூவரும் ஆச்சரியப்படுவது போல் "கல்யாணம் நிச்சயமாகிவிட்டதா? யார் அந்தப் பெண்?" என்று கேட்டார்கள். அபர்ணாவும் "வேறு யாருமில்லை. நான்தான். நீங்கள் போய் வருகிறீர்களா?" என்று கூறிச் சட்டெனத் தன் வீட்டிற்கு ஓடிப் போனாள். மூன்று பிசாசுகளுக்கும் ஒரே மகிழ்ச்சி. தம் திட்டப்படி அபர்ணா மனம்மாறி மாதவனை மணக்கத் தீர்மானித்து விட்டாள் என்று அவை திருப்தி அடைந்தன. அவை ஆந்தைகளாக மாறிப் பறந்து போயின. அடுத்த பௌர்ணமியன்று அவை மாதவனை முன்பு சந்தித்த பாறையருகே வந்து நின்றன.

மாதவன் அபர்ணாவுடன் அங்கு வந்தான் அபர்ணா அப்பிசாசுகளிடம் "நீங்கள் மூவரும் என் கர்வத்தை ஒழித்து எனக்கு நல்ல கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தீர்கள். அதற்கு மிக்க நன்றி" என்றாள். அப்பிசாசுகளும் "இந்த சுப காரியம் இவ்வளவு விரைவில் நடந்ததும் எங்களுக்கு மகிழ்ச்சி.

இனி மாதவன் மகிழ்ச்சி தரும் மதுர கீதம் பாட நாங்கள் கேட்டு ரசிப்போம்" என்றன. உடனே மாதவன் பாட ஆரம்பிக்க அபர்ணாவும் சேர்ந்து பாடினாள். பிசாசுகள் அந்த இசையில் லயித்து மெய்மறந்து நின்றன!.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## கானல் வரிகள்

30



இதெல்லாம் தெரியாமல் மாதவி தொடர்ந்து பாடினாள். நம்மை அவர் மறந்தாலும் நாம் அவரை மறவோம் என்றாள் இதுபோல விரகத்தில் வாட்டும் மாலைப் பொழுதுகள் அவர் ஊரிலும் உள்ளதோ என்றாள்.

கோவலன் அதிர்ந்தான் யாருடைய பிரிவு இவளை இப்படி விரகத்தில் வாட்டுகிறது?

ஆயிரம்தான் இருந்தாலும் தான் கணிகைக் குலத்தைச் சேர்ந்தவள் என்பதைக் காட்டிவிட்டாளே! ச்சீ!

இதற்குமேல் கோவலனுக்கு எதையும் பொறுத்துக் கொள்ளும் சக்தி இல்லை. நேரமாயிற்று. புறப்படலாமா? என்று எழுந்தான்.

இப்போது அவன் முகத்தில் ஏமாற்றமும் கோபமும் வெளிப்படையாகத் தெரிந்தன.

மாதவியும் எழுந்தாள். ஆனால் கோவலன் குதிரை செல்லும் திசையைப் பார்த்து அவளுக்கு அதிர்ச்சி .

ஏனெனில் கோவலன் அவளிடம் கானல் வரிப் பாடல்களுக்கு விளக்கமோ அர்த்தமோ கேட்கவில்லை. சட்டென்று மாதவியின் வீடு இருக்கும் பக்கத்துக்கு எதிர்த்திசையில் குதிரையை விரட்ட ஆரம்பித்திருந்தான்.

மாதவி ஒரு விநாடி திகைத்துப் போனலும் சட்டென்று தன்னைச் சமாதனப்படுத்திக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் இருக்கப்போகிறது இந்தக் கோம்! என்று நினைத்தவாறு வண்டியில் ஏறினாள்.

அது கூடலில் முடிகிற வழக்கமான ஊடலில்லை என்பது அவளுக்கு அப்போது தெரியவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 47

பொருளாதார சீர்திருத்தம் தொடர்பாக குச்மா ஒரு வலுவான பாராளுமன்ற எதிர்ப்பைக் கையாள்வதில் பெரும் சவாலை எதிர்கொண்டார். 1996 ஆம் ஆண்டளவில் உக்ரைன் சிறு பொருளாதார உறுதிப்படுத்தலை (macroeconomic stabilization) அடைய முடிந்தது. அந்த ஆண்டில் உக்ரைன் தனது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட நாணயமான ஹ்றிவ்னியாவை (hryvnya) அறிமுகப்படுத்தியது. இவ்வாறு இருந்தாலும் தசாப்தத்தின் இறுதியில் பொருளாதாரம் தொடர்ந்து மோசமாகவே இருந்தது.

சிக்கலான அதிகாரத்துவ நடைமுறைகள் மற்றும் அமுலாக்கப்படாத பொருளாதாரச் சட்டம் ஆகியவை வணிகத்தை மிகைப்படுத்தப்பட்டதாகவும் ஊழலால் நிறைந்ததாகவும் இருக்க வழிவகுத்தது. அதுமட்டுமின்றி, குறைந்த அளவிலான அந்நிய முதலீட்டை மட்டுமே நாடு ஈர்க்க முடிந்தது. 1998 இன் ரஷ்ய பொருளாதார நெருக்கடி உக்ரைனின் பொருளாதாரத்தையும் எதிர்மறையாக பாதித்தது.

1999 இல் வரி சீர்திருத்த நடவடிக்கைகளின் அறிமுகமானது நாட்டின் குறிப்பிடத்தக்க நிழல் பொருளாதாரத்தில் இருந்து நிறுவப்பட்ட அல்லது வெளிவரும் சிறு தனியார் வணிகங்களின் எண்ணிக்கையில் வளர்ச்சியைக் கண்டது. 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சட்டபூர்வமான பொருளாதாரம் வளரத் தொடங்கியது.

### உக்ரைனிய பாராளுமன்றத் தேர்தல்-1998

**உக்ரைனில் தேர்தல் சட்டம் மாற்றியமைக்கப்பட்டு கலப்பு தேர்தல் முறைமை (பெரும்பான்மை மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம்) ஒக்டோபர் 1997 இல் உருவாக்கப்பட்டது. விகிதாசர முறையில் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற கட்சிகள் குறைந்தபட்சம் 5 சதவீத வாக்குகளை பெற வேண்டும்.**

சர்வ சன இரகசிய வாக்கெடுப்பு மூலம் சமமான மற்றும் நேரடி வாக்குரிமையின் அடிப்படையில் உக்ரைன் குடிமக்களால் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

225 இடங்களுக்கு பெரும்பான்மை முறையும் (பெரும்பான்மை முறைமையின் (Majority System) கீழ் தேர்தல் தொகுதியின் அதிகூடுதலான வாக்குகளை பெற்றுக்கொள்கின்ற வேட்பாளர், பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். (First Past the Post System – FPP) அவர் உரிய தேர்தலில் செல்லுபடியான வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையொன்றை (Absolute Majority) பெற்றிருக்கின்றார் எனக் கருத்தில் கொள்ளப்படவும் மாட்டாது.)

225 ஆசனங்களுக்கு மூடிய கட்சிப் பட்டியலைப் பயன்படுத்தி விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் உருவாக்கப்பட்டது. விகிதாசர முறையில் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற கட்சிகள் குறைந்தபட்சம் 4 சதவீத வாக்குகளை பெற வேண்டும்.

உக்ரைனில் 29 மார்ச் 1998 அன்று பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்றத்தில் 445 இடங்களில் 121 இடங்களில் வெற்றி பெற்று மிகப்பெரிய கட்சியாக நீடித்தது.

இத் தேர்தலுக்கு வாக்களிக்க 37,540,092 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 26,571,273 பேர் வாக்களித்தனர். செல்லுப்படியற்ற வாக்குகள் 821,699 ஆகும். வாக்களிப்பு வீதம் 70.78% ஆகும்.

**ஐந்து தேர்தல் மாவட்டங்களில் நடந்த தேர்தல் வாக்குகளுக்குப் பிறகு வெற்றியாளரை அறிவிக்க முடியாத அளவுக்கு முறைகேடுகள் நடந்தன. மேலும் பாராளுமன்றத்தில் 450 உறுப்பினர்களுக்கு 5 உறுப்பினர்கள் குறைவாகவே தெரிவு செய்யப்பட்டனர்.**

உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி, கீவ் நகரம் உட்பட 18 பிராந்தியங்களில் வெற்றி பெற்றது. மற்ற மூன்று பிராந்தியங்களில் கட்சி இரண்டாவது இடத்தைப் பிடித்தது. உக்ரைனின் மக்கள் இயக்கம் (ருக்) ஐந்து பிராந்தியங்களில் வென்றது, அவை அனைத்தும் மேற்கு உக்ரைனில் அமைந்துள்ளன, மேலும் மூன்று இடங்களில் பெரும்பாலும் மேற்கு மற்றும் கீவ்வில் வலுவான இரண்டாம் இடத்தைப் பிடித்தன.

சோசலிஸ்டுகள் மற்றும் விவசாயிகளின் தேர்தல் கூட்டணி இரண்டு பிராந்தியங்களில் மட்டுமே வெற்றியைப் பெற முடிந்தது, இருப்பினும் மத்திய உக்ரைனில் உள்ள மற்ற ஏழு பிராந்தியங்களில் அது வலுவான கூட்டணியாக இருந்தது. புதிய மற்றும் வளர்ந்து வரும் ஹ்ரோமாடா கட்சி தினிபிராபிட்ரோவஸ்க் பிராந்தியத்தை வென்றது, அதே நேரத்தில் உக்ரைனின் சமூக-ஜனநாயகக் கட்சி சாகர்பாசியா பிராந்தியத்தைப் பாதுகாக்க முடிந்தது.

உக்ரைன் பிரதம மந்திரிகள்



விக்டர் யுஷ்செங்கோ (1999-2001) அனடோலி கினாக் (2001-2002)

(தொடரும்)

# சீனா- தாய்வான் இடையே போர்ப் பதற்றம் உக்கிரம்

(பீஜிங்)

**தாய்வானை நாலாபுறமும் சுற்றி வளைத்து கடல், வான் வெளியில் போர்ப் பயிற்சியை மீண்டும் ஆரம்பித்தது சீனா. இதனால் சீனா- தாய்வான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது.**

சீனாவில் 1927 ஆம் ஆண்டு முதல் 1949 ஆம் ஆண்டு வரை நடந்த உள்நாட்டு போருக்கு பின் தாய்வான் சீனாவிடம் இருந்து பிரிந்து தனி நாடாக உருவானது. ஆனால் சீனாவோ தாய்வான் தங்கள் நாட்டின் ஒரு பகுதியே என்று தொடர்ந்து கூறி வருகிறது.

இந்நிலையில், உலகின் பிற நாடுகள் தாய்வானின் சுதந்திரத்தை ஆதரிப்பதை சீனா கடுமையாக எதிர்க்கிறது.

ஆனால், அதை மீறி தாய்வானுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவுக்கரம் நீட்டி வருகிறது. இந்த விவகாரத்தில் அமெரிக்கா-சீனா இடையே மோதல் போக்கு நீடிக்கும் சூழலில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி சீனாவின் கடும் எதிர்ப்பை மீறி தாய்வானுக்கு சென்றார்.

இதனால் கடும் கோபம் அடைந்த சீனா தாய்வானை நாலாபுறமும் சுற்றி வளைத்து கடல் மற்றும் வான்வெளியில் போர்ப் பயிற்சியை தொடங்கியது.

அதன்படியே நேற்று முன் தினம் மதியம் 12 மணி வரையில் தொடர்ந்து 4 நாட்களாக சீன இராணுவம் கடுமையான போர்ப் பயிற்சியில் ஈடுபட்டது. சீன இராணுவத்தின் இந்த போரப் பயிற்சி தங்கள் நாட்டின் மீது படையெடுப்பதற்கான ஒத்திகை என தாய்வான் குற்றம் சாட்டியது. இந்த நிலையில் சீன இராணுவம் நேற்று தாய்வானை சுற்றி புதிய போர்ப் பயிற்சியை தொடங்கியது.

கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளிட்ட அதிநவீன ஆயுதங்கள் மூலம் கடல்வழி தாக்குதல் மற்றும் தொலைதூர வான்தாக்குதல் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சீன இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகப்பெரிய அளவில் இந்த போரப் பயிற்சி நடத்தப்படுவதாக சீன இராணுவம் கூறியது. அதேசமயம் இந்த புதிய போர்ப் பயிற்சி எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்பதை சீன இராணுவம் தெரிவிக்கவில்லை.

மேலும் தாய்வானை சுற்றி தொடர்ந்து 4 நாட்கள் போர்ப் பயிற்சியை நடத்திய பின்னர் சீனா மீண்டும் மிகப்பெரிய போர்ப் பயிற்சியை தொடங்கி இருப்பதால் தாய்வான்-சீனா இடையிலான போர் பதற்றம் உச்சத்தை எட்டியுள்ளது. (நி)

# உக்ரைனில் இருந்து தானியங்களுடன் புறப்பட்ட கப்பல் துருக்கியை வந்தடைந்தது

(துருக்கி)

ரஷ்யா - உக்ரைன் ஒப்பந்தத்தின் கீழ், உக்ரைன் துறைமுகத்திலிருந்து தானியங்களுடன் புறப்பட்ட கப்பல்களில் முதல் கப்பல் துருக்கியை வந்தடைந்தது.

உக்ரைனின் சோர்னோமோர்ஸ்க் துறைமுகத்திலிருந்து கடந்த 5ஆம் திகதி 12,000 தொன் சோளத்துடன் புறப்பட்ட கப்பல் நேற்று முன்தினம் திங்கட் கிழமை துருக்கியை வந்தடைந்தது.

இதுகுறித்து உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், 'உக்ரைன் உங்களைக் கைவிடாது என மத்திய கிழக்கு, ஆபிரிக்கா,



ஆசியாவில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் இந்தத் தகவல் நம்பிக்கை அளிக்கிறது' என பதிவிட்டுள்ளார்.

ஒப்பந்தப்படி உக்ரைனிலிருந்து 12 கப்பல்கள் அனுப்பப்படவுள்ளன. 3,22,000 மெற்றிக் தொன் வேளாண் பொருட்கள் உக்ரைன் துறைமுகங்களிலிருந்து கப்பல்களில் புறப்பட்டுள்ளன.

உக்ரைன் போரால் உலகில் 4.7 கோடி பேர் பசியால் வாடும் அபாயம் இருப்பதாக ஐ.நா. எச்சரித்தது. அதையடுத்து, உக்ரைனிலிருந்து தானியக் கப்பல்களை கருங்கடல் வழியாக வெளிநாடுகளுக்கு அனுப்ப வழிவகை செய்யும் ஒப்பந்தம்- ரஷ்யா, உக்ரைன் இடையே ஐ.நா. மற்றும் துருக்கி முன்னிலையில் கடந்த மாதம் கையொப்பமானமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களும் பகுதிநேர வேலை செய்யலாம்

## இலங்கையில் புதிய சட்டம்

(கொழும்பு)

பதினாறு வயது முதல் இருபது வயது வரை உள்ள இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் பகுதி நேரமாக வேலை செய்யும் வகையில் சட்டங்களில் திருத்தம் செய்ய தொழிற்துறை அமைச்சு தயாராகி வருகிறது.

அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், சிறுவர்கள் வேலை செய்யும் சூழலுக்குப் பழக்கப்படுத்தப்படாததால் தொழிற்துறையில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்த வயதிற்குட்பட்ட இளைஞர்கள் மாதத்திற்கு இருபது மணிநேரம் பகுதிநேர வேலைகளைச் செய்யலாம் என்றும் அந்தச் சேவைக்காலத்திற்கு தனியார் நிறுவனங்களும் ஊதியம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதிய சட்ட திருத்தத்தின்படி, பாடசாலை மாணவர்களும் பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும் என்றாலும் நிரந்தர வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடாது என்றும் முறையான பயிற்சி கட்டாயம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எவ்வாறாயினும் ஆபத்தான வேலை வாய்ப்புகள் எழுபத்து இரண்டு இருப்பதாகவும், அவற்றில் பணிபுரிய அவர்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்றும் தொழிற்துறை அமைச்சு தெரிவித்தள்ளது.

பகுதிநேர வேலைவாய்ப்பில், இ.பி.எஃப். மற்றும் ETF செலுத்தும் போது பிரச்சினை ஏற்படுவதால், அதற்கான விதிகளிலும் திருத்தம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது. (நி)

# கோரிக்கைகளை நிறைவேற்றினால் சர்வகட்சியில் இணைவோம்

## விக்னேஸ்வரன் எம்.பி.

(கொழும்பு)



அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக வாக்களித்ததாக சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவது குறித்து அவதானம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார். (நி)

# பழைய முறைமையில் தேர்தலை நடத்துங்கள்

## அரசியல் கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

பழைய முறைமையின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஒக்டோபர் 31 ஆம் திகதியின் பின்னர் உள்ளூராட்சி தேர்தலுக்கான தினத்தை நியமிக்குமாறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் கோரிக்க்க விடுத்துள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போதே அரசியல் கட்சிகளால் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# தேநீர், உணவுப்பொதி விலைகள் குறைப்பு

(கொழும்பு)

தேநீரின் விலை 30 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சோற்று பார்சல் ஒன்று 10 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக சிற்றுணவக உரிமையாளர்கள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

எரிவாயு கொள்கலன் விலைகளில் ஏற்படுத்தப்பட்ட குறைப்பை அடுத்தே இந்த விலை குறைப்பை தாம் மேற்கொள்வதாக சிற்றுணவக உரிமையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (நி)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான மருத்துவ பரிசோதனை கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திர விநியோகம் மற்றும் புதுப்பிப்பதற்கான மருத்துவ பரிசோதனை கட்டணம் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி இலகுரக வாகனங்களுக்கான புதிய மருத்துவ பரிசோதனைக் கட்டணம் 1500 ரூபாவாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக தேசிய மருத்துவ போக்குவரத்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

கனரக வாகனங்களுக்கு சிறுநீர் பரிசோதனை தவிர புதிய மருத்துவ பரிசோதனை கட்டணம் 1,500 ரூபாவாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பரிசோதனைகளுக்காக பயன்படுத்தப்படும், பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பு காரணமாக இவ்வாறு கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய மருத்துவ போக்குவரத்து நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)


# INVITATION FOR BID (IFB)

## Delft Pradeshiya Sabha

1. The chairman, local Authority Procurement Committee on behalf of the **Pradeshiya Sabha, Delft, Northern Province,** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. Interested eligible bidders may obtain further information from **Chairman/ Secretary, Pradeshiya Sabha, Delft, (Tel.No.0212215211, Fax.0212215211, E-mail: tsecretarydelft@yahoo.com)** on any working day from 09:00 hrs. To 14:00 hrs. **10th August 2022 till 24th August 2022.**

4. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Section 5 (Schedule) of the bidding document.

5. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted by Ministry of finance or World Bank or any other acceptable Institutions. And Domestic Contractors shall have been registered in the field of **Building** construction for grade mentioned in the table below with the Institute for Construction Industry Development Authority (CIDA).

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address below from 10th August 2022 until 24th August 2022 from 09:00 hrs. To 14:00 hrs. On working days upon payment of a non-refundable fee of Rs. 2500.00 for each contract. The method of payment should be by cash.

7. Bids shall be delivered in Original & Copy directly or sent by Registered Post to the address below on or before 14:30 hrs. On 24th August 2022. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend. Bids must be accompanied by a bid security as per the information given in the table below.

8. Pre-bid meeting will be held on 17th August 2022 at 10:30 hrs. In the Pradeshiya Sabha Office, Delft. Interested bidders may attend the meeting at their own expense.

| No | Bid No | Description of work | Source of fund | Estimated Civil Cost Rs. (Million) | Contract Period | Required Grade | Validity Period of bid from the last date of bid submission | | Required Bid security | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Validity Period | Date | Security Amount (Rs) | Validity Period |
| 1 | LDSP/JAF/ DELFT/PT 2/01 | Construction of public toilet with water tank at Delft market | LDSP | 2.52 | 60 Days | C8 /C7 (Buildings) | 63 Days | 26.10.2022 | 25,000 | 24.11.2022 |
| 2 | LDSP/JAF/ DELFT/PT 2/02 | Improving facilities in library- Delft west | LDSP | 0.62 | 30 Days | C9/C8 (Buildings) | 49 Days | 12.10.2022 | 6,000 | 10.11.2022 |
| 3 | DPS/CF/20 22/03 | Repairing of internal ceiling at cultural hall, Delft Pradeshiya sabha | Council Fund | 0.44 | 30 Days | C9/C8 (Buildings) | 49 Days | 12.10.2022 | 4,000 | 10.11.2022 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Delft Pradeshiya Sabha,**
**Jaffna,**
**Northern Province,**
**10.08.2022**

(C-4722)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே
உண்மை வெற்றி பெறும்!
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கை இனி எடுப்பார் கைப்பிள்ளை

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று கங்கணம் காட்டி நின்றவர்கள் இப்போது நாட்டைத் தொலைத்துவிட்டு நிற்கிறார்கள்.

உண்மை. இலங்கையின் பொருளாதார நெருக்கடி என்பது வல்லரசுகளின் வலை வீச்சுக்கான ஓர் ஒத்திகை என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

தமிழ் இனத்தை அழித்து இலங்கையைப் பௌத்த சிங்கள நாடாக ஆக்க வேண்டும் என்று மிகத் தீவிரமாக ஈடுபட்டவர்கள் இப்போது சீனக் கப்பலையும் பாகிஸ்தானின் போர்க்கப்பலையும் தடுக்கமுடியாதவர்களாகத் தடுமாறுகின்றனர்.

இலங்கையின் சுதந்திரத்திலும் சுதந்திரத்துக்கு முன்னும் பின்னுமான காலகட்டத்திலும் நாட்டின் அனைத்துக் கட்டமைப்பிலும் தமிழ் மக்களின் வகிபங்கு காத்திரமாக இருந்தது.

எனினும் சிறுபான்மை இனமாக இருக்கக்கூடிய தமிழ் மக்களின் கல்வி, பொருளாதார எழுச்சிகண்டு பொறாமை கொண்ட சிங்களப் பேரினவாதிகள், காலத்துக்குக் காலம் தமிழ் இனத்தைத் துவம்சம் செய்து பேரினவாதத் தீக்கு தீனியிட்டனர்.

தமிழ் இனத்தை அழிப்பதன் மூலம் இலங்கையை பௌத்த சிங்கள நாடு எனப் பிரகடனம் செய்வதே சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் குறிக்கோளாக இருந்தது.

இதன் உச்சக்கட்டமே 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்பாகும்.

அன்று தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்காக உலக நாடுகளிடம் கையேந்திய இலங்கை, அதனால் ஏற்படக்கூடிய பாதகத் தன்மையை இம்மியும் நினைத்தில.

மாறாக தன் நாட்டு பிரஜைகளை கொன்றொழிப்பதில் மட்டுமே கண்ணும் கருத்துமாக இருந்த இலங்கை இன்று பொருளாதாரத்தால் நொந்து கெட்டு பிச்சை எடுக்கின்ற அளவுக்கு வந்துவிட்டது.

இலங்கையில் தமது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டுமென நீண்டநெடுங்காலமாகத் திட்டமிட்டிருந்த வல்லாதிக்க நாடுகள் இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இலங்கையை வறுமைக்குள் தள்ளிவிட்டன.

வறுமைப்பட்ட நாடு இனி என்ன செய்ய முடியும். ஒரு வார்த்தை எதிர்த்துக் கதைத்தாலே கடன் தரமுடியாது என்று தடிப்புக் காட்டக்கூடிய நிலையில்; இனி எந்த நாடு போர்க்கப்பலை அனுப்பினாலும் ஏன்? தன் நாட்டுக் குப்பைகளை அனுப்பினாலும் கூட, இலங்கையால் எதுவும் செய்ய முடியாது.

என்ன செய்வது இன ஒற்றுமையைப் பேணி இலங்கையை வளப்படுத்தாமல் நாட்டைத் தமதாக்க நினைத்து இருந்ததையும் இழந்ததுதான் மிச்சம் என்றாயிற்று.

இனி இலங்கை எடுப்பார் கைப்பிள்ளை என்பதுதான் நிறுதிட்டமான உண்மை.

# கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணியை துரிதப்படுத்துங்கள்

## சுகாதார அமைச்சர் கெஹலிய பணிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது கொரோனாத் தொற்று நோய் பரவும் வீதம் அதிகரித்துள்ள நிலையில், நிலைமையைக் கட்டுப்படுத்த தடுப்பூசி பெற்றுக்கொள்ளும் திட்டத்தை துரிதப்படுத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன், உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் இந்த தொற்றுநோய் பரவலை எதிர்கொண்டு கடுமையான நெருக்கடியில் உள்ளன எனவும், நமது நாட்டில் வெற்றிகரமான முறையில் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதன் மூலம் நாட்டில் குறித்த நோயை கட்டுப்படுத்த முடிந்துள்ள நிலையில், அந்த முறைகளை மிகவும் தீவிரமாக கையாள வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது பரவி வரும் கொரோனா மற்றும் டெங்கு நோய் தொடர்பில் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமை தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் முன்னைய தொற்று நிலைமைகளைப் போன்று நிலைமையை அதிகரிக்க வேண்டாம் என்றும் ஜனாதிபதி சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

இக்கலந்துரையாடலின் போது, மாவட்ட மற்றும் மாகாண வைத்திய அதிகாரிகள் மட்டத்தில் இருந்து ஆரம்பித்து நிலைமையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறிப்பாக, கண்டி எசல பெரஹராவிற்கு வருகை தரும் போது சுகாதார வழிகாட்டுதல்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களை பாதுகாப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், வைரஸ் ஒழிப்புக்கான விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## தனியார் பேருந்துகளுக்கு முழுமையாக டீசலை வழங்க தீர்மானம்

பயணிகள் போக்குவரத்துக்கான தனியார் பேருந்துகளுக்கு தேவையான டீசலை முழுமையாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

கடந்த காலங்களில் பயணிகள் போக்குவரத்து தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்குவது மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நேற்று முதல் முழுமையாக பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்கப்படுகின்றது. (ம-7)

## அரசியல் தீர்வு கோரி மன்னாரில் போராட்டம்

(மன்னார்)

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நூறு நாட்கள் நடைபெற உள்ள செயற்றிட்டத்தின் 9 ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று செவ்வாய்கிழமை மன்னார் தோட்டவெளி பிரதான நுழைவாயிலுக்கு அருகாமையில் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் நூறு நாட்கள் நடைபெற உள்ள செயற்றிட்டத்தின் 9 ஆவது நாள் போராட்டம் மேற்படி இடம்பெற்றது.

குறித்த செயற்றிட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களால் 100 நாள் செயற்றிட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டது. (4-285)

## காட்டு யானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழப்பு

காட்டு யானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கெக்கிராவ - ஹொரபொல பிரதேசத்தில் நேற்று இடம் பெற்றுள்ளது.

57 வயதுடைய குறித்த பெண் தனது வீட்டுக்கு அருகிலுள்ள தனது மகனின் வீட்டுக்குச் சென்றிருந்தபோதே இவ்வாறு காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

இந்தக் காட்டு யானை, கலாவெவ தேசிய பூங்காவில் இருந்து கிராம்த்துக்கு வந்துள்ளது எனக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## கொக்குவில் சாயி துர்க்காதேவிக்கு இன்று தேர்த்திருவிழா

(குப்பிழான்)

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று புதன் கிழமை காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இடம்பெற உள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)

## இம்மாத இறுதிக்குள் உயர்தர பரீட்சை பெறுபேறு வெளியாகும்

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இந்த மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பமான உயர் தரப்பரீட்சைக்கு 3 இலட்சத்து 45 ஆயிரத்து 242 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கொழும்பு பங்குச்சந்தையின் மொத்த புரள்வு 5.34 பில்லியனாக பதிவு

கொழும்பு பங்குசந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் நேற்று 8,500 புள்ளிகளாக பதிவாகியுள்ளது. இதேவேளை, நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் பங்குச்சந்தையின் மொத்த புரள்வு 5.34 பில்லியன்களாக பதிவாகி உள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## குடிநீர் கட்டணத்தை அதிகரிக்க அனுமதி

(கொழும்பு)

நாட்டில் குடிநீர் கட்டணத்தை உயர்த்துவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பான பிரேரணையை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளதுடன் அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதன்படி, குடிநீர் கட்டணத்தில் திருத்தம் செய்வது குறித்து எதிர்காலத்தில் அறிவிக்கப்பட உள்ளது.

எவ்வாறாயினும் கடந்த 10 வருடங்களாக நீர் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணெய் விநியோகத்தை துரிதப்படுத்துங்கள்

## கூட்டமைப்பு கோரிக்கை

(அராலி)

**மண்ணெண்ணெய் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டிருப்பதனால், வடக்கில் மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் தொழில் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதைக் கருத்திற்கொண்டு மண்ணெண்ணெய் விநியோகத்தை துரிதப்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

மண்ணெண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடை தொடர்பில் சுட்டிக்காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'கடந்த இரண்டு மாத காலமாக வடக்கின் கடற்றொழிலை நம்பி வாழும் மீனவர்களும் விவசாயிகளும் தமது படகுகள் மற்றும் விவசாய இயந்திரங்களுக்குத் தேவையான மண்ணெண்ணெயினைப் பெற்றுக்கொள்ள முடியாது பெரும் சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர்.

வடக்கின் பெரும்பகுதியான குடும்பங்கள் கடற்றொழில் மற்றும் விவசாயத்தினை நம்பி வாழ்வதாலும் அவர்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிப்படைந்துள்ள நிலையிலும், அரசாங்கம் மிகவும் விரைவாக போதுமான அளவிலான மண்ணெண்ணெயினை இறக்குமதி செய்து, தடையின்றி விநியோகிக்க, துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள், கடற்றொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சார்பாக அவசரமான வேண்டுகோளை முன்வைக்கின்றேன்' என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-104)

## முக்கொம்பன் கிராமத்தில்

# கசிப்பினை ஒழிப்பதற்கு களமிறங்கிய பெண்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் கிராமத்தில் இருந்து கசிப்பினை ஒழிப்பதற்கு கிராம பெண்கள் ஒன்றிணைந்து நடவடிக்கையில் இறங்கி உள்ளனர்.

கசிப்பினை கட்டுப்படுத்துங்கள் என பூநகரி பொலிஸாரிடம் நேரிலும் மனு மூலமும் பெண்கள் கோரிக்கை விடுத்த போதிலும் தமக்கு பெற்றோல் இல்லாததன் காரணமாக முக்கொம்பன் கிராமத்திற்கு வருகை தர முடியவில்லை என பொலிஸார் தெரிவித்த நிலையில் ஒன்று திரண்ட பெண்கள் கசிப்பு உற்பத்தி இடம் பெறும் பகுதிகளை சுற்றி வளைத்து கசிப்பினை கைப்பற்றியதுடன் உற்பத்தியில் ஈடுபட்டவர்களையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிராமத்தில் இருந்து கசிப்பினை ஒழிப்போம் எனும் வகையில் கிராமந்தோறும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டு வருகின்றன.

கசிப்பினால் குடும்ப, சமூக வன்முறைகள் அதிகரித்ததன் காரணமாகவே பெண்கள் ஒன்றிணைந்து கசிப்பினை ஒழிப்பதற்கு ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதாக அப்பகுதி பெண்கள் தெரிவிக்கின்றனர். (4-350)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நெருக்கடியில் மக்கள் எழுச்சியும் எதிரான ஒடுக்குமுறைகளும் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் விசேட உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ர விரிவுரையாளரும் பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கத்தின் உப தலைவருமான கலாநிதி. அகிலன் கதிர்காமர் ஆற்றவுள்ளார். (4-18)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது ஹயஸ்




(யாழ்ப்பாணம்)

யாழ். கைதடியில் இருந்து கோப்பாய்க்கு செல்லும் பிரதான வீதியில் ஹயஸ் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டினை இழந்த நிலையில் அருகில் உள்ள மதகில் மோதி தடம்புரண்டுள்ளது.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இதில் ஹயஸ் வாகன சாரதி காயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

# பூநகரி கறுக்காய் தீவுக்கான பேருந்து சேவை ஆரம்பம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி கறுக்காய் தீவுக்கான இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை நேற்று தொடங்கி உள்ளது.

பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சனால் இலங்கை போக்குவரத்து சபையின் கிளை முகாமையாளரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் இப்பேருந்து சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 7.30 மணிக்கு பூநகரி வாடியடியில் இருந்து ஞானிமடம் ஊடாக கறுக்காய் தீவினை குறித்த பேருந்து சென்றடையும். இதே வழித்தடத்தில் பிற்பகல் 1.30 மணிக்கும் பேருந்து சேவை நடைபெறும். இப்பகுதியில் ஞானிமடம் பாடசாலை, கறுக்காய் தீவு மகா வித்தியாலயம், அண்மையில் திறக்கப்பட்ட பூநகரி கல்விக் கோட்ட பணிமனை என்பன உள்ளன.

ஞானிமடம், கொல்லங்குறிச்சி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வாழ்கின்ற 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பூநகரி பிரதேச மருத்துவமனைக்கு வருவதற்கு போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்ட நிலையில் தற்போது தொடங்கப்பட்டுள்ள பேருந்து சேவையினால் பெரும் நன்மை ஏற்பட்டுள்ளதுடன் பாடசாலைகளுக்குச் செல்கின்ற மாணவர்கள், ஆசிரியர்களின் போக்குவரத்திற்கும் பெரும் நன்மை ஏற்பட்டுள்ளது. (4-84-350)

## மஹோற்சவம்

(தருமபுரம்)

கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூர் ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலய மஹோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (4-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 350 |
| தக்காளி | 400 | 360 | 370 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 260 | 300 | 200 |
| கோவா | 350 | 350 | 350 | 400 |
| கரட் | 280 | 320 | 350 | 400 |
| பூசணி | 130 | 100 | 150 | 140 |
| புடோல் | 80 | 100 | 120 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 170 | 190 | 170 |
| பாகற்காய் | 300 | 600 | 380 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 200 | 280 | 250 | 300 |
| லீக்ஸ் | 350 | 200 | 270 | 280 |
| பீற்றூட் | 120 | 200 | 140 | 180 |
| கறிமிளகாய் | 600 | 200 | 400 | 700 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 450 | — | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | — | 300 |
| கீரை - 1 பிடி | 150 | 100 | 80 | 130 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 700 | 40-60 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 120 | 100 | 120 | 240 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 150 |



தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைப் புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவு நோயாளர்களுக்கு சிவபூமி அறக்கட்டளையினால் நேற்று செவ்வாய்க்கிழமை சத்துமா அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் கலந்து கொண்டு சத்துமாவை மருத்துவமனைச் சமூகத்திடம் நேரடியாகக் கையளித்தார்.

(படம்: ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், நேரிய குளம் பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் மூச்சுத் திணறல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவரிடம்மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த குடும்பஸ்தர் நேற்று மரணமடைந்துள்ளார். (ம-7)

## ரணிலைச் சந்தி...

கொள்ளப்போவதில்லை என ஜே.வி.பி அறிவித்துள்ளது.

உத்தேச சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவிருந்தது.

எனினும், ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க கட்சி தீர்மானித்துள்ளது என்று ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஜனாதிபதியுடனான பேச்சில் கலந்துகொள்ளும் போதிலும் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு கட்சி ஆதரவளிக்காது என்று ஜே.வி.பி. தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)
















## மல்லாகத்தில்...

தெல்லிப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் பகுதியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையமொன்றுக்குள் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நுழைந்த வன்முறைக் கும்பலொன்று நடத்திய வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## 6 தொற்றாளர்...

சாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களில் சிலரில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே குறித்த நபர்கள் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

அதேசமயம் இனங்காணப்பட்ட அனைவரும் ஏற்கெனவே கொரோனாத் தடுப்பூசியை ஒரு வருடத்துக்கு முன்னர் பெற்றுக் கொண்டவர்கள் என பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த ஜூலை மாதம் கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் இருவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## அரச அடக்கு...

கள் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற வளாகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-7)

## வேட்டையாட...

இளைஞர்களை வேட்டையாடும் நடவடிக்கையை அரசு ஆரம்பித்துள்ளது. "கோட்டா கோ கம"வில் நிர்மாணிக்கப்பட்ட நூலகத்துடன் தொடர்புடைய இளைஞர்களைக் கைது செய்து விசாரிக்கவும் அரசு முயற்சித்துள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரச அடக்குமுறையை நிறுத்துமாறும் அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறும் கோரி ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பாராளுமன்ற வளாகத்துக்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எதிர்வரும் 12ஆம் திகதி சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு அரசு இந்நாட்டின் சிறைச்சாலைகளை இளைஞர்களால் நிரப்பும் நோக்கில் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அரசால் முன்னெடுக்கப்படும் இந்த அடக்குமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அரசால் முன்னெடுக்கப்படும் இந்த அடக்குமுறையையும் அரச மிலேச்சத்தனத்தையும் ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

மர்மமான முறையில் இளைஞர்கள் காணாமல்போவதன் பின்னணியில் உள்ள இயக்கி யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அரசால் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்து நாட்டை சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும்" என்றார். (ம-7)

## வேகமாக பயணி...

செய்மதிகள் மற்றும் ஏவுகணைகளை கண்காணிக்க முடியுமான வசதிகள் கொண்ட சீனாவின் Yuan Wang 5 கப்பல் நேற்று பிற்பகல் இலங்கையில் இருந்து 680 கடல் மைல் தொலைவில் பயணித்துக் கொண்டிருந்தது. மணித்தியாலத்திற்கு 14 கடல் மைல் வேகத்தில் அந்நேரத்தில் கப்பல் பயணித்துக் கொண்டிருந்தது. இதற்கு முன்னர் இந்த கப்பல் மணித்தியாலத்திற்கு 10 முதல் 13 கடல் மைல் வேகத்தில் பயணித்துக் கொண்டிருந்தது.

தமது பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் நிலவுவதாக தெரிவித்து சீனாவின் இந்த கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு பயணிப்பதை இந்தியா கடுமையாக எதிர்த்ததுடன் இந்த கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறு நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சு சீனாவிற்கு அறிவித்திருந்தது.

இந்தக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தரவுள்ளதாக சீனா ஜூன் 28ஆம் திகதி அறிவித்ததுடன், ஜூலை 12ஆம் திகதி வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது. அதன்படி, ஜூலை 14 ஆம் திகதி இந்த கப்பல் அங்கிருந்து புறப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏவுகணை கண்காணிப்புகளை மேற்கொள்ள முடியுமான சீனாவின் உற்பத்தியான பாகிஸ்தானின் யுத்த கப்பல் ஒன்றும் 12 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது. PNS Taimur என்ற இந்த யுத்த கப்பல் தனது கன்னிப் பயணத்தில் ஈடுபட்டுள்ள நிலையிலேயே கொழும்பிற்கு வரவுள்ளது.

சீனாவின் அதி தொழில்நுட்ப ஆய்வு மற்றும் கண்காணிப்புக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கும் சீனாவின் உற்பத்தியான பாகிஸ்தானின் யுத்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கும் ஒரே நேரத்தில் [illegible] வுள்ளது.

இலங்கையின் பூகோள அமைவிடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. எனினும், நாட்டை நிர்வகித்தவர்கள் எடுத்த தவறான தீர்மானங்கள் காரணமாக இன்று நாடு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. (ம-7)

## ஒடுக்குமுறையை...

பிட்டுள்ளது..

கடந்தகாலத்தில் நிலவிய தவறான நிர்வாகம், மனித உரிமை மீறல்களின் தொடர்ச்சி என்பவற்றின்பின்னர் இலங்கை அரசியல், பொருளாதாரம் மற்றும் மனித உரிமை என்பன நெருக்கடியில் சிக்குண்டுள்ளதாகவும் மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

கருத்து சுதந்திரம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் உட்பட அடிப்படை உரிமைகளை மதிக்கவேண்டும் என்றும் ஆயுதப்படையினரின் துஷ்பிரயோகத்தை முடிவிற்கு கொண்டுவர வேண்டும் என்றும் அது தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.


அத்தோடு, இலங்கை அரசாங்கமானது மனித உரிமைகளை பின்பற்றி, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தி, நெருக்கடிகளுக்கு தீர்வைக் கண்டால் மாத்திரமே சர்வதேச உதவிகள் பயனுள்ளவையாகக் காணப்படும் எனவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (ம-7)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் ஆட்சிக்கு அப்பால் இராணுவ ஆட்சி இடம்பெறுகிறதா?

## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி கேள்வி



(கொழும்பு)

**நாட்டில் ரணில் ஆட்சிக்கு அப்பால் இராணுவ ஆட்சி இடம்பெறுகிறதா என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க தன்னை நியாயமுள்ளவராக அடையாளப்படுத்தி செயற்பட்டால், அவர் சிறந்த ஜனாதிபதியாக இருப்பார் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்று உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

அவர், தமிழர்களுடைய இனப் பிரச்சினை தீர்வில் முழுமையாக ஈடுபட்டால், நாடு மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும் என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கொள்கை விளக்க உரையை ஆற்றிக்கொண்டிருக்கும்போது, படையினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டுமீறிய அடக்குமுறைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி, கண்டாவளையில் அமைந்துள்ள பாற்கடற்பூங்கா, மயூரன் ஆகிய முன்பள்ளிகள் அண்மையில் படையினரால் வீரமுத்துக்கள் முன்பள்ளிகள் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த முன்பள்ளிகளுக்கு இராணுவ இலட்சினைகளுடன் பெயர் பலகைகளும் பொருத்தப்பட்டுள்ளன என்று சிறீதரன் குறிப்பிட்டார்.

இந்த முன்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இராணுவத்தின் சிவில் பிரிவின் பெயர் பொறிக்கப்பட்ட ஆடைகள் வழங்கப்பட்டுள்ளன்.

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் 481 பேர் முன்பள்ளி ஆசிரியர்கள் படையினரின் சிவில் படைப்பிரிவின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அவர்களுக்கு படையினராலேயே வேதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஆரம்பக்கல்வியை இராணுவ மயப்படுத்தப்படுவது இலங்கையில் இன ஒடுக்குமுறைக்கு ஒரு உதாரணம் என்றும் சிறீதரன் குறிப்பிட்டார்.

எனவே ரணில் விக்கிரமசிங்க நியாயமான ஒருவராக இருந்தால் அவர் இவ்வாறான பிரச்சினைகள் உட்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும்.

இல்லையென்றால் இராணுவத்துக்கு பயந்தே நாட்டில் ஆட்சி நடத்தப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கும்.

அத்துடன் அரசாங்கத்துக்கு புறம்பாக நாட்டில் இராணுவ ஆட்சி இடம்பெறுகிறது என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார். (ம-7)

## தேசிய எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டம்!



(கொழும்பு)

தேசிய எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு நேற்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்களின் பங்குபற்றுதலுடன் பிரதான போராட்டம் நடைபெற்றது.

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று "தேசிய எதிர்ப்புத் தினத்தை" குறிக்கும் வகையில் பாராளுமன்றத்திற்கு வெளியே போராட்டம் நடத்தியது.

எவ்வாறாயினும், கடந்த அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களுடன் ஒப்பிடுகையில் நேற்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற போராட்டங்களில் மக்கள் கூட்டம் குறைவாக காணப்பட்டது. (ம-7)

### பாராளுமன்...

...கையை முன்னெடுத்த பாதுகாப்புப் படையினருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

பொதுமக்கள் பாராளுமன்றத்தை முற்றுகையிடாத வகையில் பாதுகாப்பினை வழங்கி, இராணுவம் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் பாராளுமன்ற நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதுடன், மக்களின் நம்பிக்கையினை வென்றெடுக்கும் வேலைத் திட்டத்தினை பாராளுமன்ற உறுப்பினர்களே முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீள கட்டியெழுப்புவதுடன், அடுத்த வருட இறுதிக்குள் நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

திருக்கும். நிறைவேற்று அதிகாரத்தை நசுக்கி ஜனநாயகத்தைப் பாது காத்து சட்ட சபையை முடக்க முயன்ற வன்முறையாளர்களை ஒடுக்கிய இராணுவத்தினருக்குத் தேசத்தின் புகழுரை உரித்தாகும்."

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெலவத்த, அக்குரேகொடவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்துக்கு நேற்று முற்பகல் விசேட உத்தியோகபூர்வ விஜயத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி, இராணுவத்தினரைச் சந்தித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பாராளுமன்றத்தைக் கைப்பற்ற வந்த எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தாமல் அமைதியான முறையில் நடவடிக்கையை முன்னெடுத்த பாதுகாப்புப் படையின

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
BIC தொடரிலக்கமுடைய Navi(HONDA) இந்தியன் 6,000km ஓடியது விற்பனைக்குண்டு. (12395)
077 548 8044

**வாடகைக்கு**
வவுனியா வைரவர் புளியங்குளம், 2 ஆம் ஒழுங்கையில் உள்ள வீட்டின் மேல் மாடியில் புதிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு (12392)
077 778 2052

**கணனி தட்டெழுத்தாளர் தேவை**
சாவகச்சேரியில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தட்டச்சு செய்யக் கூடிய கணனி தட்டெழுத்தாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (12389)
077 487 7368

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12398)
076 825 7716 (ஆகாஸ்)

**சிறுநீரகம் தேவை**
O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
(45 வயதுக்கு உட்பட்டவர்)
தொடர்புகொள்ளவும். (12399)
077 076 0383

**காணி விற்பனைக்கு**
யாழ். நாவற்குழி சந்தியில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (12378)
076 490 5403, 076 491 2493, 076 [illegible]

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport க்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS (C-4659)
0777-068-777

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**
EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும் (C-4659)
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org